பொருளடக்கம்



| வரிசை எண். | | பொருள் | பக்கம் எண். |
| --- | --- | --- | --- |
| 1. | | முன்னுரை | 1 |
| 2. | | வருவாய் வசூலின் போக்கு | 2 |
| 3. | | கடந்த ஆறு ஆண்டுகளில் சட்டங்கள் வாரியான வரி வருவாய் | 3 |
| 4. | | நிர்வாக அமைப்பு | 5 |
| | 4.1 | வரிவிதிப்புப் பிரிவு | 8 |
| | 4.2 | மறு ஆய்வு மற்றும் மேல்முறையீட்டுப் பிரிவு | 10 |
| | 4.2.1 | மாநிலக் கணக்காயரின் தணிக்கை | 11 |
| | 4.3 | மேல்முறையீட்டுப் பிரிவு | 12 |
| | 4.3.1 | மேல்முறையீடு | 12 |
| | 4.3.2 | தமிழ்நாடு விற்பனை வரி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் | 13 |
| | 4.4 | நுண்ணறிவுப் பிரிவு | 17 |
| | 4.4.1 | மத்திய நுண்ணறிவுப் பிரிவு | 17 |
| | 4.4.2 | நுண்ணறிவுக் கோட்டம் | 19 |
| 5. | | புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | 24 |
| 6. | | வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம் | 26 |
| 7. | | துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | 30 |
| 8. | | நிர்வாகச் செலவினம் | 31 |

| வரிசை எண். | | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|---|
| 9. | | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | 32 |
| | 9.1 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | 32 |
| | 9.2 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் | 33 |
| | 9.3 | மிகை இலாபத் தடுப்பிற்கான ஆலோசனைக்குழு, முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பு மற்றும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு | 36 |
| | 9.4 | வரி செலுத்துவோரைப் பகிர்ந்தளித்தல் | 38 |
| | 9.5 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரிவிகிதம் | 39 |
| | 9.6 | மின்னணு வழிப் பட்டி | 42 |
| 10. | | வணிகர் நலன் | 43 |
| | 10.1 | வணிகர் நல வாரியம் | 43 |
| | 10.1.1 | செயல்பாடுகள் | 43 |
| | 10.1.2 | உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணம் | 44 |
| | 10.1.3 | நலத்திட்ட உதவிகள் | 44 |
| 11. | | கணினிமயமாக்கல் | 46 |
| | 11.1 | முழுமையான தீர்வுத் திட்டம் | 46 |
| | 11.2 | மற்ற இணைய வழிச் சேவைகள் | 49 |
| | 11.3 | துறைக்கு வழங்கப்பட்டுள்ள அக இணையதள வசதிகள் | 50 |
| | 11.4 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப்படுத்துதல் | 53 |

| வரிசை எண். | | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|---|
| | 11.4.1 | வணிகர்கள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளத்திற்கு மாறுதல் | 53 |
| | 11.4.2 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணைய தளம் மூலம் புதிய வணிகர்களின் பதிவு | 55 |
| | 11.4.3 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் படிவங்கள் சமர்ப்பித்தல் | 57 |
| | 11.4.4 | தகவல்களை மீளப்பெறுவதற்கான ஆய்வுக் கூடம் | 57 |
| 12. | | உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் | 58 |
| | 12.1 | வணிகவரி அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 58 |
| | 12.2 | கட்டடப் பராமரிப்பிற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு | 60 |
| 13. | | தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 | 61 |

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2019–2020

# வணிகவரித் துறை

## முன்னுரை

தமிழ்நாடு, மற்ற மாநிலங்கள் பின்பற்றக் கூடிய வகையில் முன்மாதிரியான பல புதுமையான வளர்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. சாதாரண குடிமகன் மீது தேவையற்ற சுமையை ஏற்றாமல் வணிகர்களின் நலனில் அக்கறை கொண்ட வரிச்சட்டங்களாலும் அரசின் மேம்பட்ட வரி திரட்டும் முயற்சியாலும் இவ்வாறான திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்துவது சாத்தியமாயிற்று. 2017–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் இத்திசையில் ஒரு மைல்கல் முயற்சியாக அமைந்தது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் வரிவிதிப்பு கட்டமைப்பினை மிகவும் வெளிப்படையானதாகவும், எளிமையானதாகவும் உருவாக்கியுள்ளது. தமிழ்நாடு அரசின் மொத்த வரி வருவாயில் 80 விழுக்காட்டிற்கு மேல் தன் பங்காக அளித்து தமிழ்நாடு அரசின் வருவாய் உட்கட்டமைப்பின் தூணாக வணிகவரித் துறை திகழ்கிறது.

## 2. வருவாய் வசூலின் போக்கு

துறையால் கடந்த ஆறாண்டுகளில் வசூலிக்கப்பட்ட வரி வருவாய் விவரங்கள் பின்வருமாறு :–

**(ரூபாய் கோடியில்)**

| வருடம் | வரி வருவாய் |
|---|---|
| 2013–2014 | 56,851.87 |
| 2014–2015 | 60,314.61 |
| 2015–2016 | 61,709.58 |
| 2016–2017 | 67,576.77 |
| 2017–2018 | 73,148.28 |
| 2018–2019 | 87,905.26 |

வணிகவரித் துறை **2018–2019-**ஆம் நிதியாண்டில் ரூ.**87,905.26** கோடி வரி (இது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் பெறப்பட்ட இழப்பீடு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வுத் தொகையையும் உள்ளடக்கியது) வசூலித்துள்ளது. இது **2017–2018-**ஆம் ஆண்டு வசூலிக்கப்பட்ட தொகையான ரூ.**73,148.28** கோடியுடன் ஒப்பிடுகையில், ரூ.**14,756.98** கோடி கூடுதலாக வசூலிக்கப்பட்டு, **20.17** சதவீத வளர்ச்சி விகிதத்தை எட்டியுள்ளது. இந்த வளர்ச்சி விகிதம் நிலையற்ற

பொருளாதார சூழ்நிலையிலும் கூட சாத்தியமானது என்பது குறிப்பிடத்தக்கது.

## 3. கடந்த ஆறு ஆண்டுகளில் சட்டங்கள் வாரியான வரி வருவாய்

கடந்த ஆறு ஆண்டுகளில் பல்வேறு சட்டங்கள் வாரியான வரி வருவாய் விவரங்கள் கீழே அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன:-

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | சட்டம் | 2013– 2014 | 2014–2015 | 2015–2016 | 2016–2017 |
|---|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் (TNVAT Act) | 51,244.97 | 53,930.47 | 54,804.54 | 59,262.00 |
| 2 | மத்திய விற்பனை வரிச் சட்டம் (CST Act) | 3,116.07 | 3,811.17 | 4,037.76 | 5,125.20 |
| 3 | தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் (TNGST Act) | 218.39 | 195.21 | 211.12 | 188.65 |
| 4 | தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம் (TNET Act) | 68.17 | 82.97 | 106.29 | 85.81 |
| 5 | பந்தய வரிச் சட்டம் (Betting Tax Act) | 5.20 | 5.60 | 5.65 | 7.86 |
| 6 | ஆடம்பரங்கள் வரிச் சட்டம் (Luxury Tax Act) | 299.51 | 319.26 | 357.03 | 379.01 |
| 7 | நுழைவு வரிச் சட்டம் (வாகனம் மற்றும் சரக்குகள்) [Entry Tax Act (Vehicles and Goods)] | 1,899.56 | 1,969.93 | 2,187.19 | 2,258.24 |
| | மொத்தம் | 56,851.87 | 60,314.61 | 61,709.58 | 67,576.77 |

## 2017–2018–ஆம் ஆண்டுக்கான வரி வசூல் விவரம்

**(ரூபாய் கோடியில்)**

| | மொத்தம் **Total** | மதிப்புக் கூட்டு வரி / சரக்குகள் மற்றும் சேவை வரி அல்லாதவை **Non VAT/Non GST *** | மதிப்புக் கூட்டுவரி / மற்றவை **VAT/ Others **** | மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி **SGST** | ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி **IGST settlement** | முன்கூட்டியே அளிக்கப்பட்ட ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி **Advance IGST settlement** | இழப்பீடு **Compensation** |
|---|---|---|---|---|---|---|---|
| ஜிஎஸ்டி–க்கு முன்பாக | 15,535.66 | 7,592.28 | 7,943.38 | 0 | 0 | 0 | 0 |
| ஜிஎஸ்டி–க்கு பின்பாக | 57,612.62 | 28,554.90 | 3,518.80 | 16,199.93 | 7,402.99 | 1,304.00 | 632.00 |
| **மொத்தம்** | **73,148.28** | **36,147.18** | **11,462.18** | **16,199.93** | **7,402.99** | **1,304.00** | **632.00** |

## 2018–2019–ஆம் ஆண்டுக்கான வரி வசூல் விவரம்

**(ரூபாய் கோடியில்)**

| மொத்தம் **Total** | சரக்குகள் மற்றும் சேவை வரி அல்லாதவை **Non-GST *** | மதிப்புக் கூட்டுவரி / மற்றவை **VAT/ Others **** | மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி **SGST** | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி **IGST settlement** | முன்கூட்டியே அளிக்கப்பட்ட ஒருங் கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி **Advance IGST settlement** | இழப்பீடு **Compen-sation** |
|---|---|---|---|---|---|---|
| 87905.26 | 42414.96 | 593.98 | 24476.56 | 12425.94 | 4842.82 | 3151.00 |

* Non-GST 2006-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்ட இரண்டாம் அட்டவணையில் இடம்பெற்றுள்ள மனித நுகர்வுக்கானமதுபானம் மற்றும் பெட்ரோலியப் பொருட்கள் மூலமான வருவாயைக் குறிப்பது

**2006-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்ட முதல் அட்டவணையில் இடம்பெற்றுள்ள இயற்கை எரிவாயு மூலமான வருவாயை உள்ளடக்கியது

## 4. நிர்வாக அமைப்பு

தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டம், மத்திய விற்பனை வரிச் சட்டம், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சாராத பொருட்கள் மற்றும் மதிப்பு கூட்டு வரி சரக்குகள், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி போன்றவற்றை நிர்வகிப்பதில் துறையானது தனது முக்கிய செயல்பாடுகளை திறமையான நன்கு கட்டமைக்கப்பட்ட அமைப்பின் உதவியுடன் செயல்படுத்தி வருகிறது. சென்னை தலைமையிடத்தில் நிர்வாகத் தலைவராகச் செயல்படும் வணிகவரி ஆணையருக்கு உதவியாக, ஆறு கூடுதல் ஆணையர்கள், ஒரு இணை ஆணையர் (நிர்வாகம்) மற்றும் பிற அலுவலர்கள் பணியாற்றுகின்றனர்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 அமலாக்கத்திற்குப் பின் ஏற்பட்ட மாற்றங்களின் அடிப்படையிலும், மறுசீரமைப்பு குழுவின் அறிக்கையின்

அடிப்படையிலும், வணிகவரித் துறையை மறுசீரமைப்பதற்கான ஆணை அரசால் பிறப்பிக்கப்பட்டது.

மறுசீரமைப்பின் சில முக்கிய அம்சங்களின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு :

- சென்னையில் இயங்கும் வணிகவரிக் கோட்டங்களில் பணிப் பளுவினை சம அளவில் பகிர்ந்தளிக்கும் பொருட்டு:

  தற்போது சென்னை (தெற்கு) கோட்டத்தின் கீழ் இயங்கி வரும் ஆவடி, சூரப்பட்டு மற்றும் திருமுல்லைவாயல் ஆகிய வரி விதிப்பு வட்டங்கள் சென்னை (வடக்கு) கோட்டத்திற்கும், இராமாபுரம் மற்றும் சாலிகிராமம் வரிவிதிப்பு வட்டங்கள் சென்னை (தெற்கு) கோட்டத்திலிருந்து, சென்னை (மையம்) கோட்டத்திற்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

- கோவை வணிகவரிக் கோட்டத்தைச் சார்ந்த திருப்பூர் வணிகவரி மாவட்டம், சேலம் வணிகவரிக் கோட்டத்தைச் சார்ந்த ஈரோடு வணிகவரி மாவட்டம் மற்றும் திருச்சி வணிகவரிக் கோட்டத்தைச் சார்ந்த

கரூர் வணிகவரி மாவட்டத்தின் கீழ் இயங்கி வரும் நான்கு வரிவிதிப்பு வட்டங்களை உள்ளடக்கி, தற்போது ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் உள்ள பணியாளர்களை மறு பரவலமர்த்தல் மூலம் பணியமர்த்தி, ஈரோட்டினை தலைமையகமாகக் கொண்ட ஒரு புதிய வணிகவரி நிர்வாகக் கோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

- புதிய ஈரோடு நிர்வாகக் கோட்டத்தின் எல்லைக்குட்பட்டு தற்போது ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் உள்ள பணியாளர்களை மறுபரவலமர்த்தல் மூலம் பணியமர்த்தி ஈரோட்டில் புதிய நுண்ணறிவுக் கோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

- நிர்வாகக் கோட்டங்களுக்குள் ஏற்கெனவே செயல்பட்டு வந்த வரிவிதிப்பு வட்டங்கள் மறுசீரமைப்பின் கீழ் நிலவியல் அருகாமை மற்றும் தொடர்ச்சியினை கருத்தில் கொண்டு அக்கோட்டத்திற்குள்ளேயே ஒவ்வொரு வரி விதிப்பு வட்டத்தின் கீழ், சுமார் **1500** முதல் **2000** வரை கொண்ட வரி செலுத்துவோரை உள்ளடக்கியவாறு வரி

விதிப்பு வட்டங்களாக மாற்றம் செய்யப்பட்டது. முன்னர் இயங்கி வந்த 329 வரிவிதிப்பு வட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டு தற்போது 338 வரிவிதிப்பு வட்டங்களாக மாற்றப்பட்டுள்ளன.

- சரக அளவில் தனித்தனியான வரி நிலுவை மீட்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இத்துறை கீழ்கண்டவாறு நான்கு பிரிவுகளை உள்ளடக்கியது :

## 4.1 வரிவிதிப்புப் பிரிவு

மாநிலம் முழுவதும் உள்ள 338 வரிவிதிப்பு வட்டங்களில், உரிய அலுவலர்களாக உள்ள உதவி ஆணையர்கள்/வணிகவரி அலுவலர்கள் தலைமையில், துறையின் முக்கியப் பணிகளான பதிவுச் சான்று வழங்குதல், வரி விதிப்பு, முந்தைய சட்டம் மற்றும் தற்போதைய சட்டத்தில் வரிவிதித்தல், வரி வசூலித்தல், தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தில் கட்டாயமாக தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆணை உறுதி ஆவணங்களை பெறுவது/வழங்குவது போன்ற பணிகள்

மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வரிவிதிப்பு வட்டங்கள், மாவட்ட/மண்டல அளவில் 42 துணை ஆணையர்களாலும், கோட்ட அளவில் 11 இணை ஆணையர்களாலும் கண்காணிக்கப்படுகின்றன.

முன்பு வணிகவரித் துறையில் வசூலிக்கப்படும் மொத்த வரி வருவாயில் ஏறக்குறைய 60 விழுக்காடு வருவாய் சென்னை மற்றும் கோவையில் இயங்கி வந்த பெருமளவு வரி செலுத்துவோருக்கான பிரிவுகள் (Large Tax Payers Units) மூலம் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டங்களின் கீழ் பெறப்பட்டது. தற்போது, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமலாக்கப்பட்ட பின்னர் 46 விழுக்காடு வருவாயினை மட்டுமே பங்களிப்பாக வசூலித்து வருகிறது. இந்நிகழ்வு சேவைகளின் மீது வரி செலுத்துவோரும் உள்ளடக்கியதன் காரணத்தினால் ஏற்பட்டது. மறு சீரமைக்கப்பட்ட பின்னர் பெருமளவு வரி செலுத்துவோருக்கான பிரிவு (Large Tax Payers Unit) சென்னையில் மட்டுமே ஒரே மாதிரியான அமைப்பை கொண்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாத பொருட்களில் விற்பனையின் பங்களிப்பான தோராயமாக ரூ.40,000/– கோடி வரி

வருவாயினை கண்காணிக்கும் பொருட்டு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு இணை ஆணையர் தலைமையின் கீழ், துணை ஆணையர்கள் உதவியுடன் செயல்படுகிறது.

## 4.2 மறு ஆய்வு மற்றும் மேல்முறையீட்டுப் பிரிவு

2017–ஆம் ஆண்டைய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ், உரிய அலுவலரின் ஆணைக்கு எதிராக முதல் மேல் முறையீடு வரி செலுத்துபவர் அல்லது துறையால் மேற்கொள்ளலாம். எனவே, தீர்மானிக்கும் அலுவலர் (உரிய அலுவலர்) அவர்களால் பிறப்பிக்கப்படும் அனைத்து ஆணைகளையும் துறையால் மறு ஆய்வு செய்யப்படுகிறது.

முன்னர் உதவி ஆணையர் தலைமையில் இயங்கி வந்த உள்ளீட்டுத் தணிக்கைப் பிரிவு பெரும்பாலும் வரி விதிப்பு அலுவலர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகளையே ஆய்வு செய்தனர். ஆனால் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்படும் அனைத்து படிவங்களும் சுய வரி விதிப்புக்குள்ளானதாக உள்ளதால் இவற்றின் மீது உரிய அலுவலரால் வரி விதிப்பு ஆணைகள் பிறப்பிக்கப்படுவதில்லை. இதனால் இவற்றின் மீது உள்ளீட்டுத் தணிக்கை செய்யும் நிலை எழாது. எனவே, உள்ளீட்டுத்

தணிக்கைப் பிரிவு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் அடிப்படையில் வருவாய் இழப்பு ஏதும் ஏற்படா வண்ணம் அதன் பணிகளும் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

மறு ஆய்வு மற்றும் மேல்முறையீட்டுப் பிரிவு உதவி ஆணையர் தலைமையில் நிர்வாக துணை ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

**4.2.1 மாநிலக் கணக்காயரின் தணிக்கை**

தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டம், மத்திய விற்பனை வரிச்சட்டம் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டங்களின் கீழ் வரிவிதிப்பு வட்டங்களில், மாநிலக் கணக்காயரால் குறிப்பிட்ட கால அளவில் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும், துறையின் அவ்வப்போதான செயல்திறன் தணிக்கை தவிர பல்வேறு கருப்பொருள் சார்ந்த ஆய்வும் மாநில கணக்காயரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநிலக் கணக்காயரால் சுட்டிக்காட்டப்படும் முக்கியத்துவம் வாய்ந்த தணிக்கைக் குறிப்புகள், துறையின் தணிக்கை குழுவின் கூட்டுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு மாநிலக்

கணக்காயரின் கூர்நோக்குகள் மீது உரிய பதில் மற்றும் சுற்றறிக்கைகள் வழங்கப்படுகின்றன.

## 4.3 மேல்முறையீட்டுப் பிரிவு

### 4.3.1 மேல்முறையீடு

தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் கீழ், உதவி ஆணையர் வரையிலான வரிவிதிப்பு அலுவலரின் ஆணைக்கு எதிரான முதல் மேல்முறையீடு, அதிகார வரம்பிற்குட்பட்ட மேல்முறையீட்டு துணை ஆணையரிடமும், துணை ஆணையரின் வரிவிதிப்பு ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடு, அதிகார வரம்பிற்குட்பட்ட மேல்முறையீட்டு இணை ஆணையரிடமும் உள்ளது. மாநிலத்தில் இருபது மேல்முறையீட்டு துணை ஆணையர்களும், இரண்டு மேல்முறையீட்டு இணை ஆணையர்களும், தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கீழ் இயங்கி வருகின்றனர். மேல்முறையீட்டு அதிகார அமைப்புகளிடம் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகளில், ஒவ்வொரு மேல்முறையீட்டு மன்றத்திலும் துறையின் சார்பாக வழக்குகளை முன்வைத்திடும் பொருட்டு, உதவி ஆணையர் பணி நிலையில் துறைப் பிரதிநிதி ஒருவர்

நியமிக்கப்படுகிறார். தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம், 2017–ன் கீழ் மேல்முறையீட்டு அமைப்பானது முதல் மேல்முறையீடு அதிகார அமைப்பு அதனைத்தொடர்ந்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அதன் பிறகு உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றம் என்கிற அடிப்படையில் இருந்தாலும், தற்போது அதிகார வரம்பிற்குட்பட்ட சரகத்தைச் சார்ந்த துணை ஆணையர்களிடமே வரி விதிப்பு மற்றும் சுற்றுக் காவல் பிரிவு சார்ந்த அனைத்து முதல் மேல்முறையீடு செய்வதற்கு அதிகார வரம்பிற்குட்பட்ட சரகத் துணை ஆணையர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் 2017 அமலாக்கத்திற்குபின் ஏற்பட்ட மாற்றங்களின் அடிப்படையில் மேல்முறையீட்டு பிரிவு விரைவில் மறுசீரமைக்கப்படும்.

### 4.3.2 தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்

2006–ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டம் மற்றும் 1956–ஆம் ஆண்டைய மத்திய விற்பனை வரிச்சட்டங்களின் கீழ் முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பினால், அதாவது, மேல்முறையீட்டு துணை ஆணையர்கள் அல்லது இணை ஆணையர்களால்

பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கு எதிராக தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யலாம். தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு சென்னையிலும், கூடுதல் அமர்வுகள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரிலும் அமைந்துள்ளன. மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு, மாவட்ட நீதிபதி நிலையில் உள்ளவரைத் தலைவராகக் கொண்டுள்ளது. இந்திய தணிக்கை மற்றும் கணக்குகள் பணி அல்லது வருமான வரித்துறை அல்லது மத்திய கலால் துறை அல்லது சுங்கத் துறை அல்லது இரயில்வே கணக்குகள் துறை அல்லது பாதுகாப்பு கணக்குகள் துறை அல்லது இந்திய பட்டயக் கணக்கர்கள் நிறுவனம் அல்லது இந்திய விலை மதிப்பீட்டு கணக்கர்கள் நிறுவனத்தின் உறுப்பினர் யாரேனும் ஒருவர் இரண்டாவது உறுப்பினராக நியமிக்கப்படுகிறார். கூடுதல் ஆணையர் பணி நிலையில் உள்ள துறை அலுவலர் ஒருவர் துறை உறுப்பினராகவும் இத்தீர்ப்பாயத்தில் பணியமர்த்தம் செய்யப்படுகிறார்.

விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் ஒவ்வொரு கூடுதல் அமர்வும், சார்நிலை நீதிபதி நிலையில் நீதித்துறை உறுப்பினர் ஒருவர் தலைமையிலும், இணை

ஆணையர் பணி நிலையில் துறை சார்பாக கூடுதல் உறுப்பினர் ஒருவரைக் கொண்டும் அமைக்கப்படுகிறது. வழக்குகளில் இணை ஆணையர் பணி நிலையில் ஒரு மாநிலப் பிரதிநிதியும், துணை ஆணையர் பணி நிலையில் ஒரு கூடுதல் மாநிலப் பிரதிநிதியும், முறையே முதன்மை அமர்வு மற்றும் கூடுதல் அமர்வுகளில் வாதிடுவர்.

மேற்கூறிய மேல்முறையீட்டு அமைப்பே முந்தைய வரிவிதிப்புகளின் கீழ் எழும் வழக்குகள் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சாராத 2006–ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டம் மற்றும் 1956–ஆம் ஆண்டைய மத்திய விற்பனை வரிச்சட்டம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள பொருட்கள் தொடர்பான வழக்குகளுக்கும் தற்போதும் நடைமுறையில் உள்ளது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017–ன் கீழ், முதல் மேல் முறையீடு அதிகார வரம்பு அதாவது மேல்முறையீட்டு துணை ஆணையர் அல்லது இணை ஆணையர் ஆணைக்கு எதிராக தேசிய மேல்முறையீட்டு ஆணையத்தில் வழக்கு தொடரலாம். சரக்குகள் மற்றும் சேவைகள் வரி ஆணையம் டெல்லியிலும் மற்றும் சென்னை,

கொல்கத்தா மற்றும் மும்பை ஆகிய மூன்று மண்டலங்களிலும் நடுவர் ஆயங்களை உருவாக்க ஏற்பளிப்பு வழங்கியுள்ளது. மேல்முறையீடு அல்லது சீராய்வு அதிகார வரம்பிற்குள் பிறப்பித்த ஆணைக்கு எதிராக இத்தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு வழக்கு தொடரலாம். மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் வழங்கும் திடமான தீர்வுகள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் சட்ட முன் மாதிரியாக இருப்பது மட்டுமல்லாமல், வரி செலுத்துவோருக்கும், வரி வசூலிப்போருக்கும் நலன் பயப்பதாக அமையும். வழங்கல் இடம் தொடர்பான வழக்குகளில் திருத்தியமைக்கப்படும் அதிகார வரம்புக்குக் கீழ் வழங்கும் ஆணையின் மீது எழும் மேல்முறையீட்டினை விசாரிக்க இத்தீர்ப்பாயம் அதிகாரம் பெற்றுள்ளது. வழங்கல் இடம் தொடர்பில்லா திருத்தியமைக்கப்படும் ஆணை வழங்கிய மற்ற வழக்குகளில் மாநில அமர்வு மேல்முறையீட்டினை விசாரிக்க அதிகாரம் பெற்றுள்ள ஒவ்வொரு மாநில அமர்வு மற்றும் மேல்முறையீட்டு தீர்ப்பாய மண்டல அமர்வுகளும் ஒரு நீதித்துறை உறுப்பினர், மத்திய மற்றும் மாநில அரசுகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு தொழில்நுட்ப உறுப்பினர் உள்ளடங்கியவையாகவும் இருக்கும்.

மாநில அரசு மாநிலத்தில் உள்ள மூத்த நீதித்துறை உறுப்பினரை மாநிலத் தலைவராக நியமிக்கலாம்.

## 4.4 நுண்ணறிவுப் பிரிவு **(Intelligence Wing)**

சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் அலுவலர்களின் மாறுபட்ட பங்களிப்பினை பிரதிபலிக்கும் வகையிலும் மற்றும் வரிசெலுத்துவோரை இன்னலுக்கு ஆளாக்காமல் எதிர்நோக்கும் இலக்கினை அடையவும் **01.06.2019** முதல் செயலாக்கப்பிரிவு "நுண்ணறிவுப் பிரிவு" என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

### 4.4.1 மத்திய நுண்ணறிவுப் பிரிவு **(Central Intelligence wing)**

ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டில் கூடுதல் ஆணையர் (நுண்ணறிவு) அவர்களின் உதவியுடன் இயங்கும் இப்பிரிவு (i) இணை ஆணையர் (புலனாய்வு) தலைமையிலான புலனாய்வுக்குழு (ii) துணை ஆணையர் (நுண்ணறிவு) தலைமையிலான ஒருங்கிணைப்புக் குழு ஆகியவற்றை உள்ளடக்கியது.

(i) இப்புலனாய்வுக்குழு (Investigation Unit) அதன்கீழ் இயங்கும் துறையில் உள்ளடங்கிய தரவுகள் மற்றும் துறைக்கு வெளியே பெறப்படும் தரவுகளை உள்ளடக்கிய தரவுக்குழு மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகளின் சந்தை விலையினை பகுப்பாய்வு செய்யும் பொருட்டு அமைக்கப்பட்ட கணக்கெடுப்புக்குழு மற்றும் ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க செயல்படுத்தப்படும் சோதனை கொள்முதல் செய்யப்படுவதன் மூலம் பெறப்படும் தரவுகளை வரி ஏய்ப்பு செய்வதற்கு கையாளப்படும் முறைகளை ஆய்வு செய்வதன் பொருட்டு இயங்குகிறது. மேலும், மறைக்கப்பட்ட/ நீக்கப்பட்ட/தொலைவிலுள்ள இடங்களிலுள்ள தரவுகளை (Data) மீட்டெடுக்க போதுமான தொழில் நுட்பத்துடன் கூடிய தொழில்நுட்ப குழு (Technical Cell) அமைக்கப்பட உள்ளது. இக்குழு புலனாய்க்குழுவிற்கு தொழில் நுட்ப அடிப்படையிலான உள்ளீடுகளை அளிக்க உதவி புரியும்.

(ii) துணை ஆணையர் (நுண்ணறிவு) அவர்களின் தலைமையில் செயல்படும் ஒருங்கிணைப்புக் குழு (Co-ordination unit) நுண்ணறிவுப் பிரிவிலிருந்து பெறப்படும் புலனாய்வுக் கோப்புகளை பரிசீலித்து கூடுதல் ஆணையர் (நுண்ணறிவு) மூலமாக ஆணையரிடம் ஒப்புதல்

பெற்று மேல்நடவடிக்கை தொடரும். இக்குழு ஆய்வுகள் குறித்த அறிக்கைகள் மற்றும் புள்ளி விவரங்களை தயார் செய்யும் பொறுப்பினை வகிக்கும்.

### 4.4.2 நுண்ணறிவுக் கோட்டம் (Intelligence Division)

மாநிலம் முழுவதும் ஒன்பது நுண்ணறிவு கோட்டங்கள் ஒவ்வொன்றும் இணை ஆணையர் (நுண்ணறிவு) தலைமையில் உள்ளன. தரவுகளை சேகரிக்க சிறப்பு குழுக்களை உருவாக்கவும், சந்தை கணக்கெடுப்பு மூலம் பெறப்படும் உள்ளீடுகளை அடிப்படையாக கொண்டும் புலனாய்வு கோப்பு தயார் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. சீரற்ற முறையில் ஆய்வு செய்வதற்கு பதிலாக நுண்ணறிவு அடிப்படையிலான ஆய்வு நடத்த உத்தேசிக்கப்படுகிறது. ஒவ்வொரு நுண்ணறிவு கோட்டத்திலும் ஒரே ஒரு நிலையான சுற்றும் படையும் மற்றும் இதர அலுவலர்கள் தரவுக்குழு, கணக்கெடுப்புக்குழு, தீர்ப்புக்குழு மற்றும் சேகரிப்பு குழுக்களாக செயல்படுவர். கோட்ட அளவில் கீழ்க்கண்ட குழுக்களாக மறு அமைப்பு செய்யப்பட்டு நுண்ணறிவு பிரிவு இயங்கும்.

**(அ) புலனாய்வுக்குழு (Investigation unit)**

இக்குழு சென்னை மாநகரத்தில் இயங்கும் இரு கோட்டங்களில் துணை ஆணையர் (நுண்ணறிவு) தலைமையிலும் மற்ற கோட்டங்களில் ஒரு உதவி ஆணையர் (நுண்ணறிவு) தலைமையிலும் செயல்படும். இப்புலனாய்வுக் குழுவின் (Investigation Unit) கீழ் இயங்கும் தரவுக்குழு (Data Cell) துறையில் உள்ளடங்கிய தரவுகள் மற்றும் துறைக்கு வெளியே பெறப்படும் தரவுகளை உள்ளடக்கியதாகும்.

கணக்கெடுப்புக் குழு (Survey Cell) சந்தை கணக்கெடுப்பு, துணை ஆணையர் (நுண்ணறிவு) அவர்களால் குறிப்பிட்டு காட்டப்படும் பொருட்களின் மற்றும் சேவைகளின் சந்தை விலை பகுப்பாய்வு மற்றும் சரிபார்ப்பு செய்வது அல்லது இணை ஆணையர் (நுண்ணறிவு) அனுமதியுடன் வேறு அதுபோன்ற பொருட்களை பகுப்பாய்வு செய்வது இணை ஆணையர் (நுண்ணறிவு) அவர்களால் அறிவுறுத்தப்படும் சோதனை கொள்முதல் போன்ற பணிகளை செய்யும் இணை ஆணையர் (நுண்ணறிவு), தேவையிருப்பின் மத்திய நுண்ணறிவு பிரிவின் கீழ் இயங்கும் தொழில்நுட்ப

குழுவின் சேவையினை உபயோகித்து மறைந்த/நீக்கப்பட்ட/ வெகுதூரமுள்ள தரவுகளை மீட்டெடுக்கும்.

**(ஆ) (i) ஆய்வகம் ( Inspection Unit)**

இக்குழு துணை ஆணையரின் (ஆய்வு) கீழ் ஆய்வுக்குழுவாகவும், மறு ஆய்வுக்குழுவாகவும் கீழ்க்கண்ட பணிகளைச் செய்யும்:-

**ஆய்வுக்குழு (Inspection cell)** துணை மாநில வரி அலுவலர் நிலைக்கு கீழில்லா அலுவலர்களை உள்ளடக்கியது. இவ்வாய்வுக்குழு இணை ஆணையர் (நுண்ணறிவுப் பிரிவு) அவர்களால் உருவாக்கப்பட்ட ஆய்விற்கான பணி, ஆய்வுப்பணியை துணை ஆணையர் மேற்பார்வையில் ஆய்வு செய்து கோட்ட அளவில் இணை ஆணையர் (நுண்ணறிவுப் பிரிவு) அவர்களிடம் ஆய்வறிக்கையை சமர்ப்பிக்கும்.

**(ii) மறு ஆய்வுக்குழு (Review Cell)** மாநில வரி அலுவலர் நிலைக்கு கீழில்லா அலுவலர்களை உள்ளடக்கி கீழ்கண்ட பணிகளைச் செய்யும்:–

1) ஆய்வுக்குழு தலைமை அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரிகள், சுற்றும்படை மற்றும்

தீர்ப்பு அதிகாரிகள் வழங்கிய ஆணைகளை மறு ஆய்வு செய்து முதல் மேல்முறையீடு தொடுப்பது, முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு வழங்கிய ஆணையினை மறு ஆய்வு செய்து தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு தொடுப்பது;

**2)** இத்தீர்ப்பாயத்தின் முன் இரண்டாவது மேல்முறையீடு செய்வதற்காக முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் ஆணையை ஆய்வு செய்வது.

(iii) **கேட்பு வசூலிக்கும் குழு (Demand Collection Cell)** ஆய்வுக்குழு, தீர்ப்புக்குழு கேட்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலக்கெடுவிற்குள் செலுத்தாத இனங்களில் நடவடிக்கை எடுத்து வசூலிக்க அமைக்கப்படுகிறது.

**(இ)** மேலே குறிப்பிட்டது மட்டுமல்லாமல் மேலும் மூன்று குழுக்கள் முறையே (i) தீர்ப்புக்குழு (ii) சட்டக்குழு (iii) சுற்றும் படை ஆகியன இணை ஆணையர் (நுண்ணறிவு) அவர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் கீழ்க்கண்ட பணிகளைச் செய்யும்:-

**(i) தீர்ப்புக்குழு** – சுற்றும் படை நிறுத்தி வைக்கும் சரக்குகள் மற்றும் வாகனங்கள் தொடர்பான நிகழ்வுகள்

(சுற்றும் படை தளத்திலேயே தீர்மானிக்கும் இனங்களை தவிர்த்து) மற்றும் இணை ஆணையரால் அனுப்பப்படும் இதர இனங்கள் மேல் எழும் வழக்குகளுக்கு இக்குழு தீர்ப்பு வழங்கும்.

**(ii) சட்டக்குழு** – இக்குழு வழக்காடு மன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளை பொருத்தமட்டில் ஆணையர் அலுவலகத்தில் இயங்கும் சட்டக்குழுவுடனும் அரசு வழக்கறிஞர்களுடனும் ஒருங்கிணைந்து செயல்படுவது மட்டுமல்லாமல் இணை ஆணையர் (நுண்ணறிவுப்பிரிவு) அவர்களால் அனுப்பப்படும் இனங்களிலும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் பிரிவு 108–ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை செயல்படுத்த இணை ஆணையர் (நுண்ணறிவுப்பிரிவு) அவர்களுக்கு உதவியாக செயல்படும்.

**(iii) சுற்றும் படை** – இச்சுற்றும் படை வாகனங்களில் எடுத்துச்செல்லப்படும் சரக்குகளை ஆய்வு செய்து குற்றங்கள் இருப்பின் அவ்விடத்திலேயே அதற்கான உரிய வரி, தண்டத்தொகை, இணக்கத்தொகை போன்றவற்றை

விதிக்கவும், ஆய்வு நேரத்திற்குள் தீர்வு ஏற்படாத இனங்களை ஒப்படைக்கும் பணிகளைச் செய்யும்.

முந்தைய ஆண்டுகளில் செயல்பட்டு வந்த மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுப்பிரிவு மற்றும் வர்த்தக நுண்ணறிவுப் பிரிவுகள் மறுசீரமைப்பு காரணமாக வணிகவரி ஆணையர் அவர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் இணை ஆணையர் (நுண்ணறிவு) பிரிவுகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவுகளில் மேற்கொண்ட பணிகள் தற்போது கோட்டம் மற்றும் தலைமையகத்திலும் புலனாய்வுக்குழுவின் கீழ் இயங்கும் பல்வேறு பிரிவுகள் கொண்ட தரவுக்குழு மூலம் தற்போது மேற்கொள்ளப்படுகிறது.

## 5. புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

மாநில தலைமையிடத்தில் புள்ளியியல் துறையின் இணை இயக்குநர் தலைமையில் புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு உள்ளது. ஒவ்வொரு வணிகவரிக் கோட்டம்/மாவட்டத்திலும், இணை ஆணையருக்கு உதவியாக ஓர் இளநிலை ஆராய்ச்சி அலுவலரும், துணை ஆணையருக்கு உதவியாக ஒவ்வொரு சரக / வணிக வரி மாவட்டத்திலும் ஒரு புள்ளியியல் ஆய்வாளரும் உள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும், புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு கீழ்க்கண்ட காலமுறை அறிக்கைகளை வெளியிடுகிறது:-

1. நிர்வாகக் கோட்டங்கள் அளவிலான மாதாந்திர செயல்திறன் அறிக்கை

2. நுண்ணறிவுக் கோட்டங்கள் அளவிலான மாதாந்திர செயல்திறன் அறிக்கை

3. அதிக வருவாய் ஈட்டும் பொருட்கள் குறித்து பகுப்பாய்வு செய்த மாதாந்திர அறிக்கை

4. எதிர்மறை வருவாய் ஈட்டும் பொருட்களின் பட்டியல் குறித்து பகுப்பாய்வு செய்த மாதாந்திர அறிக்கை

5. பெருவணிகர்களின் வருவாய் பற்றிய விவரங்களைப் பகுப்பாய்வு செய்த மாதாந்திர அறிக்கை

6. எதிர்மறை வருவாய் ஈட்டும் வணிகர்களின் பட்டியல் குறித்து பகுப்பாய்வு செய்த மாதாந்திர அறிக்கை

7. சட்ட வாரியாக, மாத வாரியாக மற்றும் கோட்ட வாரியாக வருவாயைத் தொகுத்தல்

8. வணிகவரித்துறையின் வருடாந்திர நிர்வாக அறிக்கை

9. வணிகவரித்துறையின் முக்கிய குறியீடுகள் மீதான வருடாந்திர அறிக்கை

10. வணிகவரித் துறை – புள்ளி விவரத் தொகுப்பின் மீது வருடாந்திர காலமுறை அறிக்கை.

## 6. வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம்

வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம், 1982–ஆம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்டு, வணிகவரித் துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கும் தலைமை பயிற்சி நிலையமாக செயல்படுகிறது. இப்பயிற்சி நிலையத்தில், நேரடி நியமன அதிகாரிகளுக்கு பணியிடைப் பயிற்சியும், பிற பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியும் பல்வேறு நிலைகளில் வழங்கப்படுகின்றன. மேலும், வணிகவரி பணியாளர்கள் பயிற்சி நிலையம், பிராந்திய அளவில் அந்தந்த கோட்ட இணை ஆணையர்கள் தலைமையில், கோயம்புத்தூர், சேலம், வேலூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் செயல்பட்டு வருகின்றது. வணிகவரி பணியாளர்கள் பயிற்சி நிலையத்திற்கு ஆண்டு தோறும்

தொடர் செலவினமாக ரூபாய் 1 கோடியை அரசு பயிற்சி அளிப்பதற்காக வழங்குகிறது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, சென்னை மற்றும் பிராந்திய அளவில், வணிகவரித் துறையின் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான கணினி பயிற்சிகள் (GSTN), இச்சட்டம் தொடர்பான சமீபத்திய திருத்தங்கள், அறிவிக்கைகள் மற்றும் சுற்றறிக்கைகள் ஆகியவையும் பயிற்சியாளர்களுக்கு பயிற்றுவிக்கப்படுகின்றன. மேலும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் சிறந்த நிர்வாகத்தின் முதல் படியாக கருதப்படுவது மின்னணு வழிப் பட்டி (e-way bill) அறிமுகப்படுத்துதலே ஆகும். எனவே, மின்னணு வழிப் பட்டி குறித்த பயிற்சி, இணை ஆணையர் முதல் இளநிலை உதவியாளர் வரை அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தினை சிறந்த நிர்வாகம் செய்யும் பொருட்டு வழங்கப்படுகிறது.

**2015–2016–**ஆம் ஆண்டு முதல் வழக்கமாக நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளுடன் கீழ்க்காணும் சிறப்பு பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன:–

> வணிகவரித் துறையில் இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்கள் ஆகிய பதவிகளில் பணியாற்றும் **100** அதிகாரிகளுக்கு **2018–19**ஆம் ஆண்டில் விழுப்புரத்தில் செயல்படும் திருவாளர்கள். எச்.ஆர்.டி. சென்டர் பி.லிட்., எனும் தனியார் நிறுவனத்தால் மேலாண்மை பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்காக அரசு ரூ. **22,89,760/–**ஐ பயிற்சிக்கான ஆண்டு பயிற்சி நிதி ஒதுக்கீட்டுத் தலைப்பின் கீழ் வழங்கியது.

துறை சார்ந்த பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சியின் போது சிறப்பு பயிற்சி வகுப்புகளாக, யோகா, ஆளுமைத் திறன் மேம்பாடு மற்றும் நேர மேலாண்மை பயிற்சி வகுப்புகள் அலுவலர்களின் தலைமைப் பண்பை மேம்படுத்தவும், சிறந்த நேர நிர்வாகத்திற்காகவும் வழங்கப்படுகின்றன.

ஊழியர்கள் மற்றும் துறை அதிகாரிகளிடம் இருக்கும் திறமைகளை மேம்படுத்தவும் மற்றும் புதியவைகளைக் கற்கவும் பயிற்சி அளிப்பதின் மூலம் வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையம் செயல்பட்டு, தரமான பொது சேவையினைத் தொடர்ந்து வழங்க இத்துறை உறுதி மேற்கொண்டுள்ளது. இப்பயிற்சி நிலையம், பணியாளர்களின் கற்றுக் கொள்ளும் ஆர்வம் மற்றும் தலைமைப் பண்புகளை வளர்த்தல் போன்றவற்றை தூண்டச்செய்து துறையின் மனிதவள திறனைப் பெருக்கி தொடர்ச்சியான தன்னார்வ செயல் முறைகளின் மூலம் வெளிப்படையான, பொறுப்பான, பொது மக்களுடன் இணக்கமான மற்றும் சிறந்த வரி நிர்வாகத்தினை அடையும் நோக்கத்திற்காகச் செயல்படுகிறது.

பயிற்சி நிலையத்தின் நோக்கம் பயிற்சியாளர்களின் மத்தியில் நல்லாட்சியின் அடித்தளமான தொடர்ச்சியான கற்றலும், குழு வேலை, தரமான பொது சேவை, ஒழுக்க நடத்தை, நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பிக்கை போன்ற நன்மதிப்புகளை உருவாக்க வேண்டும் என்பதாகும்.

## 7. துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

வணிகவரித் துறையால் 30.06.2017 வரையில் பின்வரும் சட்டங்கள் நிர்வகிக்கப்பட்டன:—

1. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டம், 2006
2. தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம், 1959
3. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச்சட்டம்,1970
4. தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939
5. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935
6. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981
7. தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவு மீதான வரிச் சட்டம், 1990
8. தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் சரக்குகள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001
9. தமிழ்நாடு விளம்பரங்கள் வரிச்சட்டம், 1983
10. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956

மேலும், கீழ்க்காணும் சட்டங்கள் 01.07.2017 முதல் வணிகவரித் துறையால் நிர்வகிக்கப்படுகின்றன:-

1. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006, மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956 (அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணையில் மாநில பட்டியலின் வரிசை எண்.54–இல் உள்ளடக்கப்பட்ட 6 சரக்குகள் மட்டும்)

2. தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017.

## 8. நிர்வாகச் செலவினம்

குறைந்த செலவில் மேம்பட்ட வருவாயினை அடைவதில் வணிகவரித் துறையின் நிர்வாகத் திறமை ஆண்டுக்காண்டு மேம்பட்டு வருகிறது. நிர்வாக செலவினமானது, மொத்த வணிகவரி வருவாயில் ஒரு விழுக்காட்டைக் கூட எந்த ஒரு வருடத்திலும் கடந்ததில்லை. 2006–ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டம் மற்றும் 2017–ஆம் ஆண்டைய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் ஆகியவற்றை நிர்வகிக்கும்போதும் இதே நிலை தொடர்கிறது.

## 9. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST)

### 9.1 சரக்குகள் மற்றும் சேவைகள் வரி

நமது மாநிலத்தில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தினை 01.07.2017 முதல் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு வணிகவரித் துறை உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பயனாக வணிகர்கள் சிரமமின்றி தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்திலிருந்து சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் மாற்றம் செய்வதற்கு உறுதுணையாயிருப்பது மட்டுமின்றி, வரி செலுத்துவோர் அடிப்படை எண்ணிக்கை மற்றும் வணிகர்கள் தங்களது மாதாந்திர படிவங்களை தாக்கல் செய்வது உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமலாக்கம் செய்யப்பட்ட பின்னர், மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் உள்ள சில குறைகளை சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தில் களைவதற்கான கோரிக்கைகள் வரி செலுத்துவோரிடமிருந்து பெறப்பட்டன. இவ்வகையான குறைகளைக் களைய மற்றும் GST சட்டத்தை எளிமையாக்கும் பொருட்டு (user friendly) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைகளில் உரிய மாற்றங்களை சரக்குகள் மற்றும்

சேவைகள் வரி மாமன்றத்தின் பரிந்துரைகளின்படி தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் **2017–ல்** சட்ட எண்.**3/2019**, நாள் **14.01.2019–ல்** சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## 9.2 சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மாமன்றம் மாறுதல் கால வகைப்பாடுகள் (Transitional Provision), வரி விகித பங்கீடு (Rationalization of Rate of Taxes) மற்றும் பலதரப்பட்ட பிரிவுகள் (sectors) தொடர்பான சில்லரை வேலைகள், பொது இணையத்தில் சட்டப்படி நடைமுறையில் உள்ள சில படிவங்களை தாக்கல் செய்வதற்கான காலக்கெடுவினை நீட்டிப்பது, செலுத்தப்பட வேண்டிய தாமதக் கட்டணத்தை தள்ளுபடி செய்வது, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி வலை அமைப்பில் (GSTN) ஏற்படும் தொழில் நுட்ப கோளாறுகளை நீக்குவது, **01.10.2018** முதல் வருவாய் ஆதாரத்தில் வரி வசூலிப்பது (TCS) மற்றும் வருவாய் ஆதாரத்தில் வரிப்பிடித்தம் செய்வது (TDS) ஆகியவற்றை நடைமுறைப்படுத்துதல் மற்றும் எதிரிடைக் கட்டண முறையினை தள்ளிவைப்பது போன்ற பல இனங்களுக்கு தீர்வு

கண்டுள்ளது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மாமன்றத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் பல அறிவிக்கைகள், சுற்றறிக்கைகள் மற்றும் தெளிவுரைகள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகின்றன.

**21.06.2019** அன்று நடைபெற்ற **35–**வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மாமன்றக் கூட்டத்தில் கீழ்க்காணும் வரி செலுத்துவோரின் நட்பார்ந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:-

- வரி செலுத்துவோர்களுக்கு உதவிடும் நோக்கில், வருடாந்திர கணக்கு விவர அறிக்கைகள் தாக்கல் செய்வதற்கான கடைசி நாளினை **31.08.2019** வரை நீட்டிப்பு செய்தல்.
- சில்லரை வேலையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உதவிடும் நோக்கில் படிவம் GST ITC-04 தாக்கல் செய்வதற்கான காலக்கெடு **31.08.2019** வரை நீட்டிப்பு செய்தல்.
- சிறு வரி செலுத்துவோர்களுக்கு உதவிடும் நோக்கில் எளிமையான புதிய படிவங்களில் காலாண்டு விவர

அறிக்கையினை தாக்கல் செய்திட ஜூலை **2019** முதல் சோதனை முறையில் செயல்படுத்துதல்.

- சேவைகள் வழங்குவதில் ஈடுபட்டுள்ள சிறு வணிகர்களுக்கு உதவிடும் நோக்கில் படிவம் GST CMP-02 தாக்கல் செய்வதற்கான காலக்கெடுவினை **31.07.2019** வரை நீட்டிப்பு செய்தல்.

வணிகர்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளை பரிசீலித்து பல்வேறு சரக்குகள் மற்றும் சேவைகளுக்கான வரி விகிதங்களை குறைக்கவும் / வரி விலக்களிக்கவும் சரக்குகள் மற்றும் சேவைகள் மாமன்றக் கூட்டங்களில் தமிழக அரசு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மாமன்றத்தின் ஒப்புதலைப் பெற்று “கஜா” புயலால் பாதிக்கப்பட்ட தமிழகத்தின் கடலூர், திருவாரூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், நாகப்பட்டினம், தேனி, தஞ்சாவூர், சிவகங்கை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களை வணிகத் தலைமையிடமாகக் கொண்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற வணிகர்களுக்கு நிவாரணமளிக்கும் பொருட்டு அக்டோபர் **2018**–ஆம் மாத

GSTR-3B படிவம் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் அல்லது இவ்விரண்டின் வெளிப்புற விநியோக விவரங்களைத் தெரிவிக்கும் GSTR-1 படிவம் தாக்கல் செய்ய வேண்டிய உரிய நாளான **20.11.2018–ஐ 20.12.2018** வரை நீட்டிக்கப்பட்டது.

**9.3 மிகை இலாபத் தடுப்பிற்கான ஆலோசனைக் குழு, முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பு மற்றும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு (Screening Committee on Anti-Profiteering, Authority for Advance Ruling and Appellate Authority for Advance Ruling)**

சரக்குகள் மற்றும் சேவைகள் மீது குறைவான வரி விகிதம் நிர்ணயிக்கும் பொழுது, அதன் தொடர்ச்சியாக சரக்குகள் மற்றும் சேவைகளின் விலை குறைப்பு நுகர்வோருக்கு சென்று அடைவதை ஆய்வின்படி உறுதி செய்ய தமிழ்நாட்டில் மிகை இலாபத் தடுப்பிற்கான ஆலோசனைக் குழு (Screening Committee on Anti-Profiteering) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும், வரி செலுத்துவோரின் வரி விதிப்பு குறித்து பிணைப்பு தெளிவுரை அளிப்பது தொடர்பாக முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பு

(Tamil Nadu Authority for Advance Ruling) மற்றும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு (Appellate Authority for Advance Ruling) ஆகிய அமைப்புகள் செயல்படுகின்றன.

மாநில மிகை இலாபத் தடுப்பிற்கான ஆலோசனைக்குழு இணை ஆணையர்(மாநில வரி) செயலாக்கம் – 1, சென்னை மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி, சென்னை (வடக்கு) ஆணையர் ஆகியோரைக் கொண்டு இணை ஆணையர்(மாநில வரி), செயலாக்கம் –1, இரண்டாம் தளம், கிரீம்ஸ் சாலை, சென்னை – 600006 என்ற அலுவலகத்தில் செயல்படுகிறது. இவ்வலுவலகத்தை தொலைபேசி எண்.044–28291717, FAX எண்.044–28291717, மின்னஞ்சல் முகவரி, jcenf.chn1@ctd.tn.gov.in மூலம் தொடர்பு கொள்ளலாம்.

மேலும், வரி செலுத்துவோரின் வரிவிதிப்பு குறித்து பிணைப்புத் தெளிவுரை அளிப்பது தொடர்பாக முன்னதாகத் தீர்மானிக்கும் அதிகார அமைப்பு (Tamil Nadu Authority for Advance Ruling) அறை எண். F-10, முதல் தளம், PAPJM கட்டிடம், எண்.1, கிரீம்ஸ் சாலை, சென்னை – 600006

என்ற அலுவகத்தில் செயல்படுகிறது. இவ்வலுவலகத்தின் மின்னஞ்சல் முகவரி jc.adv.rul@ctd.tn.gov.in என்பதன் மூலம் தொடர்பு கொள்ளலாம். மேலும், மேல்முறையீடு அதிகார அமைப்பு அலுவலகம் இரண்டாம் தளம், எழிலகம் வளாகம், சேப்பாக்கம், சென்னை– **600 005** என்ற அலுவலகத்தில் செயல்படுகிறது. இவ்வலுவலகத்தினை தொலைபேசி எண்.**044–28521744** மற்றும் மின்னஞ்சல் முகவரி cct@ctd.tn.gov.in மூலம் தொடர்பு கொள்ளலாம்.

## 9.4 வரி செலுத்துவோரைப் பகிர்ந்தளித்தல்

முந்தைய மதிப்புக் கூட்டு வரிச்சட்டத்தின் கீழ், வரி செலுத்துவோர் பல்வேறு மத்திய மற்றும் மாநில சட்டங்களின் நேர்வுக்கேற்ப மத்திய மற்றும் மாநில வரி அதிகாரிகள் ஆகிய இருவரையும் எதிர்கொள்ளவும் மற்றும் சட்டங்களைக் கடைபிடிக்கவும் நேரிட்டது. ஆனால், சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் வணிகர்கள் ஒரு சட்டம் மற்றும் ஓர் அதிகாரியை எதிர் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. மத்திய மற்றும் மாநில வரி நிர்வாகங்களுக்கிடையேயான கூட்டு அதிகாரப் பகிர்வு (Cross Empowerment) காரணமாக வணிகர்கள் நடைமுறையில் எதிர்கொள்ளும் சுமைகள்

பெரிதும் குறைக்கப்பட்டுள்ளன. நமது மாநிலத்தில், மத்திய மற்றும் மாநில வரி நிர்வாகங்களுக்கிடையேயான, வரி செலுத்தும் வணிகர்களைப் பகிர்ந்தளிக்கும் மாபெரும் பணி ஏற்கனவே முடிக்கப்பட்டுள்ளது.

## 9.5 சரக்குகள் மற்றும் சேவைகள் வரிவிகிதம்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ், சுமார்,

- 183 சரக்குகளுக்கும் மற்றும் 97 வகையான சேவைகளுக்கும் முழுவதுமாக வரி விலக்களிக்கப்–பட்டுள்ளது.
- 308 சரக்குகள் மீது குறைந்த வரிவிகிதமான 5% வரி விதிக்கப்பட்டுள்ளது.
- 178 சரக்குகள் மீது 12% வரி விதிக்கப்பட்டுள்ளது
- 517 சரக்குகள் மீது 18% வரி விதிக்கப்பட்டுள்ளது .
- 32 சரக்குகள் மீது அதிகபட்ச வரிவிகிதமான 28% வரி விதிக்கப்பட்டுள்ளது .

- சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப்படுத்தப்படுவதால், மாநில அரசுக்கு ஏற்படும் வரிவருவாய் இழப்பினை ஈடுசெய்யும் பொருட்டு 28% வரி விதிக்கப்படும் சில பொருட்கள் மீது மேல்வரி விதிக்கப்படுகிறது.

- இதுதவிர விலை உயர்ந்த கற்கள் மற்றும் தங்கம், வெள்ளி மற்றும் பிளாட்டினத்தால் ஆன 18 பொருட்கள் மீது 3% வரி விதிக்கப்பட்டுள்ளது.

- வைரம் மற்றும் விலை உயர்ந்த கற்கள் போன்ற 3 பொருட்களுக்கு 0.125% வரி விதிக்கப்பட்டுள்ளது

- 31.03.2019 வரை, ரூபாய் ஒரு கோடி வரையிலான வரிக்குட்பட்ட விற்று முதல் உள்ள பதிவுப்பெற்ற வியாபாரிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் இணக்க முறையில் 1% வரியின் கீழ் வரி செலுத்த வழிவகை உள்ளது. 01.04.2019 முதல் ரூபாய் ஒன்றரை கோடி வரையிலான வரிக்குட்பட்ட விற்று முதல் உள்ள பதிவுப்பெற்ற வியாபாரிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் இணக்க முறையில் 1% வரியின் கீழ் வரி செலுத்த நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- இறக்குமதி மற்றும் வெளி மாநிலங்களுக்கு வழங்கப்படும் சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு, ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின் கீழ் வரி விதிக்கப்படுகிறது.

வணிக மற்றும் தொழில் சங்கங்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளை ஆய்வு செய்த பின்பு, அக்கோரிக்கையின் மீது உள்ள விளக்கங்களுடன் GST மாமன்றத்திற்கு நடைமுறைப்படுத்த அனுப்பப்படும். சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் பரிந்துரையின் பேரில் மட்டுமே, மத்திய மற்றும் மாநில அரசுகள், சரக்குகள் மற்றும் சேவைகளின் மீது விதிக்கப்படும் வரி விகிதத்தில் ஏதேனும் மாறுதல்கள் மேற்கொள்ள இயலும்.

இதுவரை சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் 35 கூட்டங்களை நடத்தியுள்ளது. இக்கூட்டங்களின் வாயிலாக பல்வேறு சரக்குகள் மற்றும் சேவைகள் மீது விதிக்கப்படும் வரி விகிதம் குறைக்கப்பட்டும் மற்றும் வரி விதிப்பதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்பட்டும் ஆணை பிறப்பித்தது, பொதுவாக மக்களுக்கும், குறிப்பாக வணிகர்களுக்கும் பேருதவியாக அமைந்தது.

## 9.6 மின்னணு வழிப் பட்டி (e-way Bill)

தமிழகத்தில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கிடையேயான சரக்கு போக்குவரத்திற்கு 01.4.2018 முதலும் மாநிலத்திற்குள்ளேயான சரக்கு போக்குவரத்திற்கு 02.6.2018 முதலும் மின்னணு வழிப் பட்டி அறிமுகப்படுத்தப்பட்டது. மாநிலத்திற்குள்ளான வழங்குதல் தொடர்பான சரக்குகள் மதிப்பு ரூ.1,00,000/– குறைவாக இருப்பின், மின்னணு வழிப் பட்டி கொண்டு செல்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக தனியாக வலைதளம் (ewaybill.nic.in/ewaybillgst.gov.in) ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. 31.3.2019 வரை இந்த தளத்தில் சுமார் 2,59,000 வரி செலுத்துவோர் பதிவு பெற்றுள்ளனர். மேலும் சுமார் 2.01 கோடி மின்னணு வழி ரசீதுகள் இடைமாநில போக்குவரத்திற்காகவும் 2.98 கோடி மின்னணு வழி ரசீதுகள் உள்மாநில போக்குவரத்திற்காகவும் உருவாக்கப் பட்டுள்ளன. மின்னணு வழி ரசீது தளத்தின் தரவு விபரங்களை பயன்படுத்திக்கொள்ள 351 உள்நுழைவு குறியீடு (login id) உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது, தமிழ்நாடு, இந்த மின்னணு வழி ரசீதுகள் அதிகப்படியாக உருவாக்குவதில், நாட்டில் ஐந்தாவது இடத்தில் உள்ளது.

தற்போது, தமிழ் நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–ன்படி, 100 சரக்குகளுக்கு மின்னணு வழிப்பட்டி முறையில் மாநிலத்திற்குள்ளே எடுத்துச் செல்வதிலிருந்து 02.06.2018 முதல் விலக்களிக்கப்பட்டுள்ளது. இதனால், சிறு குறு மற்றும் நடுத்தர வணிகர்களின் சரக்குகளை உள்ளூரில் மாநிலத்திற்குள் தடையில்லாமல் எடுத்துச்செல்ல முடிகிறது மற்றும் உண்மையில் அந்த துறைகளில் மின்னணு வழிப்பட்டி முறையின் செயல்பாடு முன்னேறியிருக்கிறது.

## 10. வணிகர் நலன்

### 10.1 வணிகர் நல வாரியம்

#### 10.1.1 செயல்பாடுகள்

வணிகர்களின் நலனுக்காக தமிழ்நாடு வணிகர் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டு, பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வாரியத்தின் ரூ.5 கோடி தொகுப்பு நிதியானது ரூ.10 கோடியாக 25.01.2017 அன்று உயர்த்தப்பட்டது. 31.03.2019 வரை 46,883 உறுப்பினர்கள் உள்ளனர்.

### 10.1.2 உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணம்

உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்தும், தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச்சட்டம், 2006–ன் கீழ் பதிவு பெறாத அல்லது சொத்து வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட சிறு வணிகர்கள், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெற்ற உரிய உரிமத்தின் அடிப்படையில், இவ்வாரியத்தில் உறுப்பினர் ஆக வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 10.1.3 நலத்திட்ட உதவிகள்

தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் குடும்ப நல உதவி, மருத்துவ உதவி, தீ விபத்து உதவி மற்றும் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் உரிய சான்றிதழ்களின் அடிப்படையில், வணிகர் நல வாரியம் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.

1. தலைமைச் செயலகத்தில் 25.07.2018 அன்று நடைபெற்ற விழாவில் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு காசோலைகளை மாண்புமிகு முதலமைச்சர் வழங்கினார். வணிகர் நல வாரியம், உறுப்பினர்களின் நலனைக் கருத்தில்

கொண்டு, 2018–ஆம் ஆண்டு குடும்ப நல உதவித் தொகையாக 12 தகுதிவாய்ந்த மனுதாரர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம், ரூ.12 இலட்சம் வழங்கப்பட்டது. மருத்துவ உதவித் தொகையாக ரூ.50,000/– இதய அறுவை சிகிச்சைக்காக ஒருவருக்கு வழங்கப்பட்டது. இதுவரை 557 உறுப்பினர்களுக்கு, நலத்திட்ட உதவித் தொகையாக ரூ.132.27 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2. கேரள மாநிலத்தில் கடந்த ஆகஸ்ட் 2018–ல் ஏற்பட்ட எதிர்பாராத வெள்ளத்தின் காரணமாக, வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்களின் நலனை கருத்தில் கொண்டு, தமிழக அரசு, தமிழ்நாடு வணிகர் நல வாரிய திரட்டு நிதியிலிருந்து ரூ.30 இலட்சம் நிவாரணப் பொருட்கள் வாங்க அனுமதியளித்தது. தமிழ்நாடு வணிகர்கள் நலன் பொருட்டும் மற்றும் அவர்கள் அண்டை மாநிலத்துடன் அதிக விற்றுமுதல் உள்ளதாலும், கேரள மாநிலத்தில் கூடுதல் வாடிக்கையாளர்களைக் கொண்ட தமிழக வணிகர்கள், அதிக விற்றுமுதல் கொண்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தமிழகத்தில், குறிப்பாக கோவை, மதுரை, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி போன்ற எல்லை மாவட்டங்களிலிருந்து கேரளாவிற்கு சரக்குகளை அனுப்புவதாலும் மற்றும்

எதிர்பாராத வெள்ளப் பெருக்கினால் பெரிதும் பாதிக்கப்பட்ட கேரள வாடிக்கையாளர்களுக்கு உதவிடவே இந்த நடவடிக்கை தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டது. தேவையான தருணத்தில் வழங்கப்பட்ட இந்நிவாரண உதவி, இரண்டு மாநிலங்களுக்கிடையேயான நல்லிணக்க உறவுக்கும், நீண்டகால நல்லிணக்க வர்த்தகத்திற்கும் வழிவகை செய்யும் பொருட்டும், வணிகர் நல வாரியத்தின் மூலம் வழங்கப்பட்டது.

## 11. கணினிமயமாக்கல்

### 11.1. முழுமையான தீர்வுத் திட்டம்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகளுக்கும் பொருந்தும் வகையில் துறையின் முழுமையான தீர்வுகளுக்கான திட்டம் ரூ.230.95 கோடி மதிப்பில் அமல்படுத்தப்பட்டது.

இந்தத் திட்டத்தின் முதன்மையான குறிக்கோள்கள் –

வணிகர்களுக்கான சேவையை மேம்படுத்துதல்

அ) எங்கிருந்தும் எந்நேரத்திலும் சேவைகளை பயன்படுத்திக் கொள்ளும் வசதி

ஆ) குறைந்த நேரத்தில் சேவைகள் மற்றும் துறையுடனான நேரடி தொடர்பு குறைக்கப்படுகிறது

இ) மேலும் அதிகமான வழிகளில் சேவைகள் வழங்குதல்

ஈ) சேவைகள் வழங்குவதில் வெளிப்படைத் தன்மை

துறையின் மேம்படுத்தப்பட்ட வரிவருவாய் ஈட்டுவதற்குரிய குறிக்கோளை அடைய உதவும் வழிமுறைகள்

அ) வரி நிர்வாகத்தை மேம்படுத்த கணினி சார்ந்த முடிவெடுக்கும் அமைப்பு

ஆ) பிற வரிவசூல் செய்யும் துறைகளின் ஒத்துழைப்புடன் வரிவருவாயினை மேம்படுத்துதல்

இ) துறையின் நேரத்தை விரையம் செய்யும் மற்றும் மதிப்பு கூடுதல் இல்லாத நடவடிக்கைகளை பெரிதும் குறைப்பதன் மூலம் துறை அலுவலர்களை அதிக வரிவருவாய் ஈட்டும் நடவடிக்கைகளில் முழுக் கவனம் செலுத்த வகை செய்தல்

ஈ) சிறந்த அமைப்பு சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கான மேம்படுத்தப்பட்ட மேலாண்மை அறிக்கைகளை உருவாக்கும் திறன்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமல்படுத்தப்பட்ட பின்னர், இச்சட்டத்தின் நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட 6 பொருட்களை கையாண்டு வரும் பதிவு பெற்ற

வணிகர்களுக்கு இத்திட்டத்தின் வாயிலாக கீழ்க்கண்ட இணையவழிச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

1. மாதாந்திர படிவங்கள் சமர்ப்பித்தல்
2. மின்னணு முறையில் வரி செலுத்துதல் (இணைய வழி மற்றும் வங்கிகள் மூலம்)
3. இணைய வழியில் உருவாக்கப்படும் ஜெஜெ, கேகே, எல்எல் மற்றும் எம்எம் படிவங்கள்
4. வரிவிதிப்பு மற்றும் வரிப்பிடித்தம்
5. வரி திருப்புகைக்கான படிவம் டபிள்யூ சமர்ப்பித்தல்
6. இணைய வழியில் சி மற்றும் எஃப் படிவங்கள் போன்ற சட்டமுறையான படிவங்கள் உருவாக்குதல்

தற்பொழுது வணிகர்கள், ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட 31 வங்கிகள் மூலம் இணைய வழியில் வரி செலுத்த முடியும். மேலும் 11 வங்கிகளின் கிளைகளில் நேரடியாக சென்று செலுத்துகைச் சீட்டு மூலமும் வரி செலுத்த முடியும்.

## 11.2 மற்ற இணையவழிச் சேவைகள்

வணிகப் பெருமக்களுக்காக https://ctd.tn.gov.in என்ற வலைதளத்தில் கீழ்க்கண்ட வசதிகள்/சேவைகள் செய்து தரப்பட்டுள்ளன:–

- சட்டங்கள், விதிகள், படிவங்கள், சுற்றறிக்கைகள், தெளிவுரைகள், அரசு ஆணைகள் மற்றும் அவ்வப்போது வழங்கப்படும் அறிவிக்கைகள் பார்க்கவும், தரவிறக்கம் செய்யும் வசதி
- வணிகர் பற்றிய விவரங்கள், செலுத்திய வரி போன்ற விவரங்களை அறிய பேரேடு வசதி
- பொருட்களின் குறியீடு மற்றும் வரிவிகிதம் தெரிந்து கொள்ளும் வசதி
- வரி செலுத்துவோர் அடையாள எண் அல்லது பெயர் மூலம் வணிகர்களின் விவரங்களைத் தெரிந்துக் கொள்ளும் வசதி.
- சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் அனைத்து வணிகர்களும் பயனடைய, மேம்படுத்தப்பட்ட தனிச் சின்னங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

## 11.3 துறைக்கு வழங்கப்பட்டுள்ளஅக இணைய வழி வசதிகள்

1. வரிவிதிப்பு அலுவலகங்களில் வணிகர்கள் சம்மந்தப்பட்ட அனைத்துப் பணிகளும் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட தி/ள். டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (டிசிஎஸ்) நிறுவனம் உருவாக்கிய வர்த்தக மென்பொருள் மூலம் பின்தள வர்த்தக அமைப்பின் அடிப்படையில் முறையாக தடையின்றி நடைபெறுகின்றன.

2. வணிகர்களுக்கான பதிவுச் சான்றிதழ் மற்றும் பிற பணிகளுக்கு கையொப்பமிட துணை வணிகவரி அலுவலர் முதல் அதற்கும் மேல் பதவியில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் மின் சமிக்ஞை கையொப்பம் (Digital Signature Certificate) வழங்கப்பட்டுள்ளன.

3. கணினி அமைப்பு மூலம் வரிவிதிப்பு ஆணைகள் வழங்கப்படுகின்றன.

4. துறை அலுவல் சார்ந்த அனைத்து புள்ளியியல் அறிக்கைகளும் இணைய வழியில் உருவாக்கிக் கொள்ளும் வசதி.

5. இணைய வழி மற்றும் வங்கிக் கிளைகளில் செலுத்தப்படும் வரி விவரங்கள் மூலம் எளிதில் வரி வருவாய் அறிவிக்கைகள் உருவாக்கிக் கொள்ளும் வசதி.

6. வரி ஏய்ப்பு செய்யும் வணிகர்களை இனம் காணும் பொருட்டு கணினி உதவியுடன் பகுப்பாய்வு மென்பொருளுடன் கூடிய வர்த்தக நுண்ணறிவுக் கருவி பயன்படுத்தப்படுகிறது. TRAN-1 படிவம் மூலம் வணிகர்கள் உள்ளீட்டு வரிகளை தவறுதலாகப் பயன்படுத்துவதை பகுப்பாய்வு செய்ய பகுப்பாய்வு மென்பொருள் கருவியில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமுறை மாற்றத்தின் போது இருப்பில் உள்ள வரி வரவினை தவறுதலாகத் துய்க்க நேரிடும் வரி செலுத்துவோரின் விவரங்களும் இக்கருவியின் மூலம் அலுவலர்களுக்கு வழங்கப்படுகிறது. பகுப்பாய்வு மென்பொருள் கருவியின் மூலம் உருவாக்கப்படும் அறிக்கைகளை பின்புல இணையதளத்தின் மூலம் அனைத்து அலுவலர்களும் அறிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

7. முழுமையான தீர்வுத் திட்டத்திலுள்ள பின்தள விவரங்கள் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமுறையிலுள்ள பதிவுச் சான்று ஒப்பளிப்பு, திருப்புத்தொகை ஒப்பளிப்பு, பதிவுச் சான்றினை ரத்து செய்தல் மற்றும் ரத்து செய்த பதிவுச் சான்றினை உயிர்ப்பித்தல் போன்ற பல்வேறு வசதிகள் துறையின் உள் இணையதளம் சிஃபி (Sify) மற்றும் பி.எஸ்.என்.எல் (BSNL) எல்காட் (ELCOT) ஆகிய சேவை வழங்குநர்கள் மூலம் வணிகவரித் துறையிலுள்ள அலுவலர்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்வசதிகளை

இணையதளத்தின் உதவியில்லாமல் தங்கள் உள்நுழை சான்றுகளின் மூலம் பாதுகாப்பான வழியில் அலுவலர்கள் பயன்படுத்த முடியும்.

8. இணையதளத்தில் பயனீட்டாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த முடியாததைப் போல் அல்லாமல் துறைக்கான உள் இணையதளத்தில் பயனீட்டாளர்களின் எண்ணிக்கையை துறையே வரையறுக்கும் வசதி செய்யப்பட்டுள்ளதால், உள் இணையதள இணைப்பின் வேகம் மற்றும் செயல்திறனை அதிகப்படுத்த முடிகிறது.

9. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி வலைத்தளத்தில் வழங்கப்படும் MPLS இணைப்பானது, பெருங்குடி எல்காட் SDC–யிலிருந்து நிறுத்தப்பட்டு முழுமையான தீர்வுத்திட்டத்தின் கீழுள்ள ஒருங்கிணைக்கப்பட்டுள்ள சேவையகத்தில் இணைக்கப்பட்டுள்ளது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி வலைத்தளத்தில், மாநிலத்திற்கான குறிப்பிட்ட தகவல்கள், பயன்பாட்டு நிரல் இடைமுகம் (Application Program Interface)மூலம் கையாளப்படுகிறது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி வலைத்தளத்தின் செயல்பாடு மற்றும் தகவல் பரிமாற்றத்திற்காக பயன்பாட்டு நிரல் இடைமுகம் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இதனை பயன்பாட்டு சேவையகத்தில் ஒருங்கிணைக்கப்படுவதால் மாநில தரவு தள

சேவையகத்தின் மூலம் அனுப்பப்படும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி வலைத்தள விவரங்கள் அட்டவணைப்படுத்தி செயல்படுத்தப்படுகிறது. உள் இணைய தளத்தில் பின்புல பயன்பாட்டின் மூலம் செயல்படுத்தப்பட்ட விவரங்களின் அடிப்படையில், மாநில அலுவலர்களுக்கான பொறுப்புகள் உருவாக்கப்படும். இது போன்று, அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புகள் முடிவடைந்தவுடன், விவரங்கள் பயன்பாட்டு நிரல் இடைமுகம் மூலமாக நிறுத்தப்பட்ட MPLS இணைப்பின் வழியாக சரக்குகள் மற்றும் சேவைகள் வரி வலைத்தளத்திற்கு மாற்றம் செய்யப்படும்.

## 11.4 சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப்படுத்துதல்

### 11.4.1 வணிகர்கள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளத்திற்கு மாறுதல்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப் படுத்தப்பட்டதன் ஒரு பகுதியாக மதிப்புக்கூட்டு வரி பதிவு பெற்ற அனைத்து வணிகர்களும் GST இணையதளத்தில் தங்கள் விவரங்களை வெற்றிகரமாக இணைத்துள்ளனர். இப்பணிக்காக, மாநிலத்தின் முக்கியமான நகரங்கள் மற்றும்

இடங்களில் சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு வணிகர்களுக்கு GST இணையதளத்தில் தங்கள் விவரங்களை பதிவு செய்வதற்கான உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. வணிகர்களுக்கு தங்கள் மதிப்புக்கூட்டு வரி பதிவு விவரங்கள் அடங்கிய JSON வடிவான விவர தொகுப்பு வழங்கப்பட்டு அதனை GST இணையதளத்தில் பதிவேற்றம் செய்து கொள்ள வசதி செய்யப்பட்டது. இதன் மூலம் வணிகர்கள் தங்கள் விவரங்களை GST இணைய தளத்தில் மீண்டும் ஒருமுறை பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லாமல் எளிதாக மாற்றம் செய்ய முடிந்தது.

இதுவரை சுமார் **5,89,000** வணிகர்கள் GST இணைய தளத்திற்கு தங்கள் விவரங்களை வெற்றிகரமாக மாற்றம் செய்துள்ளனர். இது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற முடிவுகளின்படி மாற்றப்பட அனுமதித்த வணிகர்களையும் உள்ளடக்கியது.

### 11.4.2 சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளம் மூலம் புதிய வணிகர்களின் பதிவு

புதிய வரி செலுத்துவோர்களின் பதிவு GST இணைய தளம் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வரி செலுத்துவோர் தங்களின் பதிவு எண் பெற அலுவலகங்களுக்கு நேரில் செல்லாமலேயே விண்ணப்பிக்கலாம். நமது மாநிலத்தில் **31.03.2018** வரை **3,12,517** வரி செலுத்துவோர் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளம் மூலம் பதிவு பெற்று GSTIN பதிவுச் சான்று பெற்றுள்ளனர். **31.03.2019** வரை மாநில மற்றும் மத்திய கண்காணிப்பிற்கு ஒதுக்கப்பட்ட **4,54,239** வரி செலுத்துவோர், GSTIN பதிவுச்சான்று பெற்றுள்ளனர்.

**31.03.2018** வரை சுமார் **7,45,000** வரி செலுத்துவோர், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளத்தில் பதிவு செய்து, மின்னணு சேவைகள் கிடைக்கப் பெற்றுள்ளனர். **31.03.2019** வரை **9,66,150** வரி செலுத்துவோர், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளத்தில் பதிவு செய்து, மின்னணு சேவைகள் கிடைக்கப் பெற்றுள்ளனர்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணைய தளத்தில், வணிகர்கள் பயன்படுத்திட உதவி மையம் எண்.**0120–4888999** மற்றும் பதிவு/குறைகளை தீர்ப்பதை கண்காணிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், வணிகர்கள் பயன்படுத்திட, வணிகவரித் துறை இணையதளத்தில் கட்டணமில்லா எண்.**1800 1036751** மற்றும் மின் அஞ்சல் முகவரி helpdesk@cto.tn.gov.in கொண்ட மாநில உதவி மையம் செயல்பட்டு வருகின்றது. மேலும், பதிவு பெறாத வணிகர்கள் எவ்வாறு படிவங்கள் தாக்கல் செய்வது, மின்னணு முறையில் வரி செலுத்துதல், இணைய வழியில் சட்டரீதியான படிவங்கள் உருவாக்குதல், மின்னணுப் படிவங்கள், வரி செலுத்துவோர் பயனீட்டாளர் கையேடு, தமிழில் வணிகர் கையேடு, படிவம் – W தாக்கல் செய்வது குறித்த உதவி கோப்பு, அடிக்கடி ஏற்படும் சிக்கல்களுக்கான உதவி கோப்பு போன்ற நடைமுறைகள் ‘‘பயனீட்டாளர் கையேட்டில்’’ வழங்கப்பட்டுள்ளது.

### 11.4.3 சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின்கீழ் படிவங்கள் சமர்ப்பித்தல்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிப்படிவங்கள் அனைத்தும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளத்தில் சமர்ப்பிக்கப்பட்டாலும் அவை அனைத்தும் “பயன்பாடு நிரலாக்க இடைமுகம்” (Application Programming Interface) மூலம் வணிகவரித் துறையின் பின்புல தளத்திற்கு கொண்டு வரப்படுகிறது. சராசரியாக மாதமொன்றுக்கு 6.25 இலட்சம் வரி செலுத்துவோர் தங்களது GSTR 3B படிவங்களை அதற்கான வரியுடன் தாக்கல் செய்கின்றனர்.

### 11.4.4 தகவல்களை மீளப் பெறுவதற்கான ஆய்வுக் கூடம்

கடைத் தணிக்கையின் போது, வணிகர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்படும் மின்னணு சேமிப்பு உபகரணங்களிலிருந்து மீளப்பெறும் தகவல்கள், அவர்கள் தொழில்நுட்ப உதவியுடன் மேற்கொண்டுள்ள வரி ஏய்ப்பினையும் மற்றும் அதிநவீன தவறுகளையும் கண்டுபிடிக்க உதவும் வகையில் இத்துறையில் தகவல்களை மீளப் பெறுவதற்கான ஆய்வுக் கூடம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

வணிகர்களின் இடத்திலிருந்து பறிமுதல் செய்யப்பட்ட நிலைவட்டு (Hard Disk) போன்ற மின்னணு சேமிப்பு உபகரணங்களிலிருந்து விவரங்கள் ஆய்வு கூடத்தில் மீளப்பெறப்பட்டு பகுத்தாய்வு செய்யப்படுகின்றன. துறை அலுவலர்களுக்கு தகவல்களை மீளப் பெறுவதற்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

## 12. உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள்

### 12.1 வணிகவரி அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

பணியாளர்களுக்கு பணி செய்வதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்பதும், வருகை புரியும் வணிகர்களுக்கு போதுமான வசதிகள் செய்துகொடுக்க வேண்டும் என்பதும் அரசின் கொள்கை ஆகும். எனவே, தனியார் கட்டடங்களில் இயங்கும் வணிகவரித்துறை அலுவலகங்களுக்கு சொந்த கட்டடங்கள் தேவை என்பதைக் கருத்திற் கொண்டு, பல்வேறு இடங்களில் இயங்கும் வணிகவரித்துறை அலுவலகங்களுக்கு சொந்த கட்டடங்கள் கட்டுவதற்கு, ரூ.126.21 கோடி மதிப்பீட்டில், 30 வணிகவரி அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதனில், ரூ.25.72 கோடி மதிப்பீட்டில்,

20 வணிகவரி கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.100.49 கோடி மதிப்பீட்டில், 10 இடங்களில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றுள் தென்சென்னையில் ரூ.73.17 கோடி மதிப்பீட்டில், 52 வணிகவரி அலுவலகங்களை உள்ளடக்குவதற்கான ஒருங்கிணைந்த வணிகவரி கட்டட கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மேலும், வடசென்னையில் ரூ.26.50 கோடி மதிப்பீட்டிலும், பூந்தமல்லி நசரத்பேட்டையில் ரூ.11.55 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த வணிகவரி கட்டட கட்டுமானப் பணிகள் முடிவு பெறும் நிலையில் உள்ளன. இவ்விரண்டு கட்டடப்பணிகள் முடிவுபெற்றவுடன் சென்னை கோட்டங்களில் உள்ள 51 வணிகவரி அலுவலகங்கள் மேற்காணும் இரண்டு கட்டடங்களில் மாற்றப்படும். மேலும், தென்சென்னையில் கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த கட்டடமும் கட்டி முடிக்கப்பட்டால், சென்னைப் பெருநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வரும் அனைத்து வணிகவரி அலுவலகங்களும் அரசுக் கட்டடங்களில் செயல்படும்.

## 12.2 கட்டடப் பராமரிப்பிற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு

ரூ.5.20 கோடி செலவில் வணிகவரி அலுவலகங்கள் செயல்படும் அரசுக் கட்டடங்களை பொதுப்பணித்துறை மூலம் பழுது பார்ப்பதற்கும், சிறப்பு பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கும், அலுவலகங்களுக்கு தேவையான தளவாடங்களை டான்சி மூலம் பெறுவதற்கும் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்பொழுது பணிகள் அனைத்தும் முடிவு பெற்று, அலுவலகங்களில் பணி செய்வதற்கு உகந்த சூழ்நிலையில் உருவாக்கப்பட்டுள்ளது.


இது தவிர, 2017–18 ஆம் ஆண்டில், ரூ.129.07 இலட்சம் மதிப்பீட்டில் 10 வணிகவரி அலுவலகக் கட்டடங்களில் CCTV கேமராக்கள் பொருத்துவதற்கு ஆணை வெளியிடப்பட்டு. தற்பொழுது, 9 வணிகவரி அலுவலகக் கட்டடங்களிலும் CCTV கேமராக்கள் பொறுத்தப்பட்டு உள்ளன. மேலும், வணிகவரி பணியாளர் பயிற்சி நிலைய கட்டடத்தில் இயங்கி வரும் திருச்சி கோட்ட இணை ஆணையர் (மாவ) அலுவலகம், ஸ்ரீரங்கம் உதவி ஆணையர்(மாவ) அலுவலகம் மற்றும் லால்குடி மாநிலவரி அலுவலர் அலுவலகக் கட்டடம் ஆகிய கட்டடங்களில் CCTV கேமராக்கள் பொருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும்,

கட்டுமானப்பணிகள் நடைபெற்று வரும் அனைத்து வணிகவரி அலுவலகக் கட்டடங்களிலும் மாற்றுத்திறனாளிகள் பயன்பாட்டிற்கு உகந்தவாறு வடிவமைக்கப்பட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


## 13. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005

வணிகப் பெருமக்களுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ள வணிகவரித் துறை அதன் செயல்பாடுகள் எளிமையாகவும், வெளிப்படையாகவும் இருப்பதை உறுதி செய்கிறது. இக்குறிக்கோளை எய்திடும் நோக்கில், தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன் கீழ், பொது மக்கள் மற்றும் வணிகப் பெருமக்களிடம் பெறப்பட்ட அனைத்து மனுக்களுக்கும் இத்துறை சிறப்பு முக்கியத்துவம் அளித்து, உரிய காலக்கெடுவிற்குள் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் உரிய தகவல்களை அளித்து வருகிறது. 2018–ஆம் ஆண்டில் 870 மனுக்கள் இச்சட்டத்தின் கீழ் பெறப்பட்டு தகவல்கள் அளிக்கப்பட்டன. இதன் மூலம் தகவல் அளித்ததன் வாயிலாக ரூ.8,904/– கட்டணமாக பெறப்பட்டுள்ளது.

**கே.சி.வீரமணி**
வணிகவரித்துறை அமைச்சர்


வரி வருவாய் – (ரூபாய் கோடியில்)
90000
80000
70000
60000
50000
40000
30000
20000
10000
0
56851.87
60314.61
61709.58
67576.77
73148.28
87905.26
2013-2014
2014-2015
2015-2016
2016-2017
2017-2018
2018-2019

# சட்டங்கள் வாரியான வருவாய் – 2018–2019




(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| மதிப்புக் கூட்டு வரி/ சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாதவை (பெட்ரோல் (ம) மதுபானம்) | 42,414.96 |
| மதிப்புக் கூட்டு வரி/ வரி நிலுவைகள் | 593.98 |
| மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | 24,476.56 |
| ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு | 12,425.94 |
| ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு முன்பணம் | 4,842.82 |
| ஜிஎஸ்டி இழப்பீடு | 3151.00 |
| **மொத்தம்** | **87,905.26** |



**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட வணிகவரி அலுவலகக் கட்டடம், கிருஷ்ணகிரி**



**செயல்பாட்டில் உள்ள கிருஷ்ணகிரி வணிகவரி அலுவலகம்**




**30.08.2018 அன்று, கேரள மாநிலம், ஆலப்புழா மற்றும் எர்ணாகுளம் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அத்தியாவசிய நிவாரணப் பொருட்களை கொண்டு செல்லும் இரண்டு லாரிகளை மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் கொடியசைத்து அனுப்பி வைத்தார்.**



**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வணிகவரித் துறையின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட ஜீப்புகள்**



**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் 25.07.2018 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் உயிரிழந்த உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு நல உதவிக்கான காசோலைகளை வழங்கினார்கள்.**